DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDL. DIST. & SESSIONS JUDGE, MADURAI

**S.C. 386/2020 P.W.3**

DEPOSITION OF WITNESS FOR: PROSECUTION DEFENCE COURT

NAME : திரு.மூர்த்தி

Fathar NAME : இராஜு

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE : 62

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.08.2026.**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மானகிரி நடுத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். சாட்சி சுகந்தி எனது உறவினராவார். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு கல்லானை என்பவர் கோமதிபுரம், விநாயகபுரத்தில் வைத்து கீழே விழுந்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். எந்த இடம் என்று குறிப்பாக தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் நான் 03.02.2020 அன்று இரவு நான் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது எனது வீட்டுக் கதவு தட்டும் சத்தம் கேட்டு வந்து திறந்து பார்த்தபோது எனது வீட்டு வாசலில் எனது உறவுக்காரரான கோமதிபுரம், விநாயகர்புரத்தில் குடியிருக்கும் கல்லானை மனைவி சுகந்தி என்பவர் அழுதுகொண்டு அவருடன் மானகிரி, கட்டாரித்தெருவில் குடியிருக்கும் அன்புநாதன் நின்று கொண்டிருந்தார்கள் என்றும் நான் சுகந்தியிடம் என்னவாயிற்று, எதற்காக இந்நேரத்தில் வந்துள்ளீர்கள் என்று கேட்டபோது இரவு சுமார் 08.00 மணியேபோல் தானும், தனது மாமியாவும் வீட்டு வாசலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது குடித்துவிட்டு வந்த தனது கணவர் தன்னிடம் தேவையில்லாமல் அசிங்கமாக பேசி தன்னை அடித்துவிட்டார் என்றும் தானும் பொறுத்துக்கொண்டிருந்ததாகவும் தனது மாமியார் அவரை சத்தம் போட்டார் என்றும் பிறகு சிறிது நேரம் பேசாமல் இருந்தவர் மீண்டும் இரவு 09.00 மணிக்கு தன்னை திட்டிக்கொண்டே சண்டையிட்டார் என்றும் தான் உடனே எதிரிக்கு போன் செய்து தனது கணவர் சண்டையிடும் விசயத்தை சொன்னேன் என்றும் எதிரி வேலையை முடித்துவிட்டு வந்துவிடுவதாக கூறினார் என்றும் உடனே தனது கணவர் வீட்டை விட்டு கிளம்பி வெளியே சென்று விட்டார் என்றும் தனது மாமியாரும் வீட்டிற்குள் சென்று படுத்துவிட்டார் என்றும் அதன் பின் இரவு 10.45 மணியளவில் திரும்ப வீட்டிற்கு வந்த தனது கணவர் வாசலில் இருந்த தன்னை சேலையைப் பிடித்து இழுத்தார் என்றும் அப்போது வீட்டிற்கு வந்த எதிரி தனது கணவர் தன்னை அடிப்பதைப்பார்த்து தனது கணவரை

பிடித்து எனது வீட்டின் வாசலின் முன்பு தள்ளிவிட்டு பக்கத்தில் இருந்த பெரிய பாறாங்கல்லை எடுத்து தனது கணவரின் தலையில் போட்டார் என்றும் அப்படியே அவரது தலை நசுங்கி இரத்தம் வந்தது என்றும் தனது மாமியாரும் சத்தம் கேட்டு வெளியே வந்து கத்தினார் என்றும் தான் பயத்தில் அழறி சத்தம் போட்டேன் என்றும் மானகிரியில் இருக்கிற தனது உறவுகக்காரர்களிடம் சொல்வதற்கு ஓடிவிட்டேன் என்றும் இரவு நேரம் என்பதால் ஆட்டோ எதுவும் கிடைக்காமல் ஓட்டமும், நடையுமாக வந்ததாகவும் அதன் பின்பு அங்கு இருக்கிற என்னிடமும் மற்றும் சிலரிடம் நடந்த விசயத்தை சொல்லி அழுதார் என்றும் உடனே நானும், அன்புநாதனும் அங்கிருந்து சுகந்தியுடன் கிளம்பி விநாயகநகரிலுள்ள சுகந்தி வீட்டிற்கு வந்தோம் என்றும் அப்போது கல்லானை அவரது வீட்டி வாசலில் தலை நசுங்கிய நிலையில் இறந்து கிடந்தார் என்றும் பக்கத்திலேயே இரத்தக் கறையுடன் பெரிய பாறாங்கல் கிடந்தது என்றும் அந்த இடத்தில் மேலமடை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி மலைச்சாமி ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும் அப்போது எதிரியும் அவர்களுடன் இருந்தார் என்றும் எதிரி அவர்களிடம் தன்னை போலிஸ் ஸ்டேசனுக்கு அழைத்துச் செல்ல சொன்னார் என்றும் பின்பு சிறிது நேரத்தில் அவர்கள் எதிரியை அழைத்துக்கொண்டு அண்ணாநகர் போலிஸ் ஸ்டேசன் அழைத்து செல்வதாக சொல்லிச் சென்றார்கள் என்றும் சிறிது நேரத்தில் போலிசார் வந்தனர் என்றும் எங்களை விசாரித்துவிட்டு கல்லானை உடலை ஆம்புலன்ஸில் வைத்து அனுப்பி வைத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது உறவினரின் மகன் என்பதால் உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

M UDHAYAVELAVAN

Digitally signed by M UDHAYAVELAVAN
Date: 2026.08.04 19:08:54 +0530

நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.